# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

05th MARCH 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 17






சுடுமாறு உத்தரவிட்டார் கோத்தா

07

தினேஷை விரட்டும் ராஜபக்ஸ குடும்பம்

06



அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரியா?

05

# தேர்தலை நடத்தக் கோரும் பிரேரணை நாடாளுமன்றில்...

## மொட்டுக் கட்சியும் ஆதரவு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்துமாறு கோரும் பிரேரணை எதிர்க்கட்சி நாடாளுமன்றில் கொண்டுவரவுள்ளது. அதற்கு மொட்டு கட்சியும் ஆதரவு வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற செயற்பாட்டு நிலையியல் குழு கூட்டம் சபாநாயகர் தலைமையில் இடம்பெற்றபோது உள்ளூராட்சி சபைத் தேர்தலை குறித்த தினத்தில் நடத்த வேண்டும் என்று கோரும் பிரேரணை நடாளுமன்றில் கொண்டுவரப்பட வேண்டும் என்ற யோசனை ஒன்றை முன்வைத்தார் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா.

அதை சபாநாயகர் ஏற்றுக்கொண்டார். அதற்கு மொட்டு கட்சி செயலாளர் சாகர காரியவசம் உள்ளிட்ட மொட்டு கட்சியினர் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதற்கான அடிப்படை பிரேரணை ஒன்றைத் தயாரிக்குமாறு சாகர காரியவசம் எதிர்கட்சித் தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்த யோசனையை ஆராய்ந்து பார்த்து மொட்டு கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து ஒன்றிணைந்த பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பிப்போம் என்று அவர் சஜித்திடம் கூறினார்.

அதேவேளை, தேர்தலுக்கான திகதியை இந்த வாரம் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.



# பாரிய வேலை நிறுத்தம்: 40 தொழில் சங்கங்கள் களத்தில்

வரி அதிகரிப்பு-விலைவாசி உள்ளிட்ட பல விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 40இற்கு மேற்பட்ட தொழில் சங்கங்கள் ஒன்றிணைந்து இந்த வாரம் பாரிய வேலை நிறுத்தம் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றன.

அதற்கான திகதியை இந்த வாரம் 8ஆம் திகதிக்கு முன் தொழில் சங்கங்கள் கூடித் தீர்மானிக்கவுள்ளன.

02

# சஜித்தின் தேசிய பட்டியலில் 41 பேராசிரியர்கள்:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் அதிகமான பேராசிரியர்கள் தேசிய பட்டியல் எம்பிக்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களின் பெயர் பட்டியலை சஜித் இப்போதே தயாரித்து வைத்துள்ளார்.அந்த அடிப்படையில் 41 பேராசிரியர்கள் சஜித்தின் தேசிய பட்டியலில் உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரம் குருநாகலில் ஆரம்பித்து

02






# மொட்டு கட்சியின் 470 தவிசாளர்கள் அவுட்

தேர்தல் நடக்காமல் போனால் மார்ச் 19ஆம் திகதியுடன் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி முடிவுக்கு வரும்.அப்படி நடந்தால் மொட்டு கட்சியின் தவிசாளர்கள் 235 பேரும் பிரதி தவிசாளர் 235

02

# தேர்தலை கோரி ஜேவிபி வழக்கு

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தக் கோரி ஜேவிபி நீதிமன்றில் இரண்டு வழக்குகளைத் தாக்கல் செய்யவுள்ளது.

அதேபோல்,நாடுபூராகவும் தொடர் ஆர்ப்பாட்டப்

02






புது சுடர்
www.puthusudar.lk
2023 MARCH 05 - SUNDAY

# பழிவாங்குகிறாரா மக்களை ?

பொருளாதார வீழ்ச்சி-அரசியல் ஸ்தீரமற்ற தன்மை இரண்டும் நாட்டை-நாட்டு மக்களை வாட்டி வதைக்கின்றன.

ஆகக்குறைந்தது உள்ளூராட்சி சபையையாவது ஆட்சி செய்து-அல்லது அதில் ஒரு உறுப்பினராக இருந்தாவது அனுபவம் இல்லாத கோத்தாபய ராஜபக்சவிடம் நாட்டின் அதி உயர் பதவியான ஜனாதிபதி பதவியைக் கொடுத்ததால் இன்று இந்த நாடு இப்படியான ஒரு பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது.

பொங்கி எழுந்த மக்கள்-அவர்கள் செய்த பிழையை உணர்ந்து-கோத்தாவை பதவியில் இருந்து நீக்கி-தாங்கள் செய்த தவறுக்கு பரிகாரம் செய்தபோதும் அந்தப் பரிகாரம் சரியாக அமையவில்லை என்றே சொல்ல வேண்டும்.

கோத்தாவின் இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க வந்து அமர்ந்ததும் நாட்டின் அதிகமான மக்கள் அதை எதிர்க்கவில்லை.சாந்தப்ப சூழலுக்கு ஏற்ப சிந்திக்கத் தொடங்கினர்.

இப்போதைய நிலையில் கட்சி பேதங்களை பார்க்க முடியாது.யார் செய்யக்கூடியவரோ-யார் திறமைசாலியோ அவரிடமே நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்றே யோசித்தனர்.

இதனால்,மக்கள் போராட்டங்களை நிறுத்தி அவருக்கு இடம்கொடுக்க முடிவெடுத்தனர்.அவ்வாறே செய்தனர். ஆனால்,இன்று அது தவறான முடிவு என்று யோசிக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். ரணிலின் செயற்பாடுகள் மக்களை மிகவும் அதிருப்தி அடையச் செய்துள்ளன.

அவர் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுக்காது-ஜனநாய கத்தையும் கணக்கில் எடுக்காது ஒரு சர்வாதி காரிபோல் செயற்படத் தொடங் கியுள்ளார்.

பொருட் களின் விலைகள்-வரிகள் மக்களால் சுமக்க முடியாதவாறு அதிகரித்துச் செல்கின்றன. கோத்தாவின் காலத்தைவிட அதிகமாக இருக்க ிறது.இருந்தும்,அ தைப்பற்றியெல்ல ாம் அலட்டிக் கொள்வதாக இல்லை ஜனாதிபதி.

உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் ஒரு சிறந்த ஜனநாயகவாதியாகப் பார்க்கப்பட்ட ரணில் இன்று அவரது சர்வாதிகார முகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளார். எதிர்க்கட்சியில் இருக்கும்போது மட்டும்தான் ஜனநாயகவாதி. அதிகாரத்துக்கு வந்தால் சர்வாதிகாரி என்பதுபோல் நடந்துகொள்கிறார்.

இந்த விடயத்தில் அவர் ராஜபக்ஸ குடும்பத்தை-கோத்தாவை மிஞ்சிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.அவர்தான் சர்வாதிகாரியாகப் பார்க்கப்பட்டார். ஆனால்,அவர் ஜனாதிபதியானதும் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அவர் மக்கள் போராட்டங்களை-ஆர்ப்பாட்டங்களை-சத்யாகிரகப் போராட்டங்களை அடக்கவில்லை. அவற்றுக்கு முழுமையாக இடம் கொடுத்தார்.

ஆனால்,இங்கு ரணில் தலைகீழாக மாறிவிட்டார்.சிறு போராட்டங்களைக்கூட நடத்த முடியவில்லை.எல்லாப் போராட்டங்கள்மீதும் தாக்குதல் நடத்துகிறார்.

அந்த அராஜகத்தின் உச்சக்கட்டம்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக் கோரி ஜேவிபி நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணிமீது பொலிஸ ார் நடத்திய தாக்குதல்.

ஆர்ப் பாட்டத்தில் கலந்து கொண்ட ஜேவிபி வேட்பாளர் சுனில் அமரசிறி என்பவர் கொல்ல ப்பட்டார்.

பொருளாதார த்தைக் கட்டி எழுப்புவதற்கு சர்வதேசத்தின் உதவி நிச்சயம் தேவை. ஆனால், அவர்கள் நாட்டில் ஜனநாயகம் இருக்கிறதா-ஜனநாயக ஆட்சி இருக்கிறதா என்றுதான் முதலில் பார்ப்பார்கள்.அது இல்லாவிட்டால் உதவமாட்டார்கள்.

ஆனால், ரணில் அதை அறிந்து கொண்டும் வெளிப்படையாகவே அராஜகத்தில் இறங்கியுள்ளார்.அவரது செயற்பாட்டைப் பார்த்தால் பொருளா தாரத்தைக் கட்டி எழுப்புவதாகத் தெரிய வில்லை.கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக நாட்டு மக்களை பழிவாங்குவதுபோலவே தெரிகிறது.

வேறு யாருக்கும் இந்தப் பதவி கிடைத்திருந்தால் சந்தர்ப்பதைப் பயன்படுத்தி-பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் அமோக வாக்குகளால் வெற்றிபெறுவதற்கே திட்டமிட்டிருப்பார்.

ஆனால்,ரணில் அவ்வாறு செய்வதாகத் தெரியவில்லை.இருக்கின்ற காலத்துக்குள் மக்களை எவ்வளவு தூ ரம் பழிவாங்கிவிட்டுச் செல்ல முடியுமோ அவ்வளவு தூரம் பழிவாங்கிக்கொண்டு இருக்கிறார் என்றே தெரிகிறது.

அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாவதற்கு விரும்பும் ஒருவரின் செயற்பாடு இப்படி இருக்காது.அவர் முதலில் இந்த அராஜகங்களை புரியமாட்டார். பொருளாதாரரீதியில் மக்களை இந்தளவு நசுக்கமாட்டார்.

சிரிச்சு சிரிச்சு ஒரு கோமாளிபோல் அல்லவா செயற்படுகிறார்.மிகவும் பொறுப்புவாய்ந்த பதவியான ஜனாதிபதி பதவிக்கே பொருந்தாத நக்கல்-நையாண்டி-கோமாளித்தனம் எல்லாம் நிறைந்து கிடக்கின்றன.இவரை ஒரு இராஜாதந்திரியாகப் பார்த்த மக்கள் ஒரு நகைச்சுவை நடிகராகப் பார்க்கத் தொடங்கியுள்ளார்கள்.

ரணிலுக்குக் கிடைத்திருப்பது அரிதிலும் அரிதான சந்தர்ப்பம்.அவர் சரியாகப் பயன்படுத்தினால் அடுத்த ஜனாதிபதியும் அவர்தான்.

ஆகவே,மக்களை-அரசியல் கட்சிகளை பழிவாங்கும் மனோநிலையில் இருந்து விடுபட்டு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி முன்வர வேண்டும்.

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் முப்பெரும் விழா - 2023









(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்த முப்பெரும் விழா சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கன கௌரவம், பாடசாலைக்கான இணையத்தள அங்குரார்ப்பணம், ஆங்கில (சுயதைழெற) சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு என முப்பெரும் விழாவாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸ் தலைமையில் இடம் பெற்ற

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் அவர்களும், கௌரவ அதிதிகளாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம்.எஸ் சகுதுல் நஜீம் மற்றும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் ஏ.எம்.எம். றபீக் அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் விசேட அதிதிகளாக கல்முனை வலய கணக்காளர் வை. ஹபீபுள்ளாஹ், உதவிக் கல்விப் பணிப்பாளரும், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளருமான என்.எம். அப்துல் மலீக், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஏ. சஹறூன் (ஆரம்பக்கல்வி), சிரேஸ்ட விரிவுரையாளர் (ஐவு) ஜனாப் ஏ.எம்.எம். நிஸ ாட் ஆகியோர்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் பாடசாலைக்குரிய இணையதளத்தினை இலவசமாக உருவாக்கித் தந்த பாடசாலையின் பழைய மாணவர்களில் ஒருவரும் பிகாஸ் கல்வி நிறுவனத்தின் சிரேஸ்ட விரிவுரையாளருமான ஏ.ஆர்.முஹம்மட் நிஸ்ஸாட் பொன்னாடை போர்த்தி பிரதம அதிதியினால் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு சான்றுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன், வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து நினைவுச்சின்னம் , சான்றிதழ் மற்றும் நினைவு மலர் என்பன அதிதிகளின் பொற்கரங்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு காரண கர்த்தாக்களாக இருந்த வகுப்பாசிரியர்களும் பகுதித் தலைவர் எம்.ஏ.சி.எல். நஜீம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாள்ர் எம்.ஐ.எம். றியாஸ உட்பட அதன் உறுப்பினர்களான எம்.சீ.எம். ஹஸீர், எஸ்.ஐ. அஸ்மீர், ஏ. ஜலீல் ஆகியோரும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுவருகின்ற மகத்தான சேவையையும் அர்ப்பணிப்பையும் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், பிரதி அதிபர், உட்பட ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்வில் அரங்கேறி பார்வையாளர்களை மேலும் பரவசப்படுத்தின.

## பாரிய...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அது ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தமா அல்லது தொடர்ச்சியான வேலை நிறுத்தமா என்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும்.

துறைமுகம்-வங்கி-சுகாதாரம்-புகையிரதம்-நீர் வழங்கல் உள்ளிட்ட முக்கிய தொழில் சங்கங்கள் இதில் குதிக்கின்றன.

## தேர்தலை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேரணிகளையும் நடத்தவுள்ளது.

இந்த இரண்டு வழிகளின் ஊடாகப் போராட்டம் நடத்தி தேர்தல் உரிமையை வெல்லப்போவதாக ஜேவிபி தெரிவித்துள்ளது.

## மொட்டு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பேரும் வீட்டுக்குச் செல்வர்.

அதேபோல் அக்கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் 3646 பேரும் வீடு செல்வர்.

மேலும் சு.க உறுப்பினர்கள் 844 ,ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் 1564,ஜேவிபி உறுப்பினர்கள் 436 ஆகியோரும் வீடு செல்வர்.

## சஜித்தின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டபோது அதில் கவனிக்கத்தக்க முக்கிய அம்சம் ஒன்று இருந்தது. அதுதான் 25 பேராசிரியர்கள் அந்த மேடையில் அமர்ந்திருந்தமை.

அப்படியென்றால் சஜித் எப்படிப்பட்ட ஆட்சி ஒன்றுக்குத் தயாராகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி வட்டாரம் தெரிவிக்கிறது.

முழுமையான நல்ல கல்விமான்களை உள்ளடக்கிய அரசு ஒன்றை அமைப்பதற்கே அவர் தயாராகி வருகிறார் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.




# மக்கள் போராட்டத்தின் ஊடாக தேர்தல் உரிமையை வெல்வோம்



நாங்கள் மக்கள் போராட்டத்தின் ஊடாக தேர்தல் உரிமையை வென்றெடுப்போம்.அதேபோல் தேர்தலையும் வெல்வோம்.

–இவ்வாறு ஜேவிபி உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டக்கள கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

தேர்தல் நடத்தினால் இந்தப் பிரச்சினை எதுவும் இல்லையே.தேர்தலை நடத்தினால் அரசுக்கு மக்கள் ஆணை இல்லை என்பது தெரிய வந்துவிடும்.

கோத்தா பதவியை விட்டு ஓடிய உடனேயே மக்கள் ஆணை முடிந்துவிட்டது.இப்போது இருக்கும் ஜனாதிபதி 133 எம்பிக்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி.அவர் மக்கள் ஆணையால் நியமிக்கப்படவில்லை.

இந்தத் தேர்தலை நடத்தினால் ஜேவிபிக்கு வெல்லும் என்று அரசுக்குத் தெரியும்.அந்த வெற்றியைத் தடுப்பதற்காகவும் அரசுக்கு வரப்போகின்ற தோல்வியைத் தடுப்பதற்காகவும் அரசு தேர்தலைத் தர மறுக்கிறது.

இந்தத் தேர்தல் உரிமையைக் கேட்டே நாம் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.ஆனால்,அந்த ஆர்ப்பாட்டம் மீது தாக்குதல் நடத்தி எமது சகோதரர் சுனில் அமரசிறி கொல்லப்பட்டார்.இது அரசால் நடத்தப்பட்ட கொலை.

ரணில் விக்ரமசிங்க அரசமைப்பை மீறி செயற்படுகிறார்.நாங்கள் மக்கள் போராட்டத்தின் ஊடாக தேர்தல் உரிமையை வென்றெடுப்போம். அதேபோல் தேர்தலையும் வெல்வோம்.என்றார்.

## எமது உறுப்பினர்களும் மரணம்



ஜேவிபி உறுப்பினர் சுனில் அமராசிரி ஊர்வலத்தின்போது மரணமடைந்தமை முதல் தடவை அல்ல.கடந்த காலங்களில் எங்களது உறுப்பினர்களும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஊர்வலமாக வரும்போது மரணித்த வரலாறு உண்டு.

இவ்வாறு மொட்டு கட்சி எம்பி ஜகாத் குமார தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்

தேர்தலை கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தும் உரிமை எவருக்கும் உண்டு.அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஜேவிபி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தமை கவலையான விடயம்.

இது முதல் தடவை அல்ல.கடந்த காலங்களில் எங்களது உறுப்பினர்களும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி ஊர்வலமாக வரும்போது மரணித்த வரலாறு உண்டு.

ஆனால், இவர்கள் யாரும் அரசு தாக்கி மரணிக்கவில்லை.கண்ணீர் புகை காரணமாகவே உயிரிழந்துள்ளார். அடித்து–துன்பறுதி மரணிக்கவில்லை.

இருந்தாலும், அந்த மரணம் இடம்பெற்றிருக்கக்கூடாது என்பதே எங்களது நிலைப்பாடு. அவர் சுகயீனமுற்றிருந்த நிலையில் அழைத்து வரப்பட்டிருந்தால் அவரை அழைத்து வந்தவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

அவரது உயிரை திருப்பிக் கொடுக்க முடியாது.கவலையை மட்டும்தான் தெரிவிக்க முடியும்.

ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஊர்வலம் செல்ல முடியாது என்பது நாம் எல்லோரும் அறிந்த விடயம்.

ஒன்றுகூடி ஆர்ப்பாட்டம் செய்ய முடியும்.ஊர்வலம் போக முற்பட்டபோதுதான் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எப்படியாவது தேர்தல் ஒன்று இடம்பெறும்.அதற்கு நாம் எல்லோரும் தயாராக வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவால் நிர்வகிக்க முடியாத சில காரணங்களால் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது.ஆனால்,தேர்தல் நடக்கும்.

நாம் பொறுமையாக இருந்து செயற்பட வேண்டும் – என்றார்.

## எல்லாத் தேர்தல்களிலும் எமக்கே வெற்றி

எல்லாத் தேர்தல்களிலும் ஐக்கிய மக்கள் சக்தியே வெற்றிபெறும் என்று அக்கட்சியின் குருநாகல் மாவட்ட எம்பி அசோக அபயசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில்,

நாடு பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.சாப்பாடு இல்லாததால் நாள் பூராகவும் உறங்கும் மக்கள் மலையகத்தில் உள்ளார்கள் என்று செய்தி வெளியாகியுள்ளது.

இந்த நாட்டை இப்படியான நிலையில் இருந்து காப்பாற்ற வேண்டும்.அரசியல் ஸ்தீரத்தன்மை இல்லாவிட்டால் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியாது. அதனால்தான் imf நிதி கிடைப்பது தாமதமாகிறது.

இலங்கையில் பல வருடங்களாக இயங்கி வந்த ஜப்பானின் மிட்சுபிஷி நிறுவனம் இலங்கையை விட்டுப் போவதற்கு முடிவெடுத்துள்ளது.இன்னும் பல நிறுவனங்கள் இவ்வாறு சென்றுவிட்டன.

தேர்தலை ஒத்திப்போட ஒத்திப்போட இந்த நிலைமை இன்னும் மோசமாகும். முட்டைகள்கூட இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

தேர்தலை நடத்தி மக்கள் அவர்கள் விரும்பும் ஆட்சியை நிறுவுவதற்கு இடம் கொடுக்க வேண்டும்.தேர்தலை ஒத்திப்போட முடியாது.அதனால் அரசு உள்ளூராட்சி தேர்தல் சட்டத்துக்கு திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்கிறது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நாங்களே வெற்றிகொள்வோம்.அதனைத் தொடர்ந்து வருகின்ற அனைத்துத் தேர்தல்களிலும் நாம் வெற்றி பெறுவோம். என்றார்.



# கோத்தாவுக்கு ஏற்பட்ட நிலைதான் ரணிலுக்கும்...



பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் அந்தத் தலைவர் கடல் வழியாக நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.இதுபோன்ற நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என்று தெரிகிறது.

–இவ்வாறு வசந்த யாப்பா பண்டார கூறினார்.அவர் மேலும் கூறுகையில்

உள்ளூராட்சி சபைத் தேர்தலும் பொருளாதாரப் பிரச்சினையும் ஒரே பிரச்சினைதான்.தேர்தல் என்பது எமது அடிப்படை உரிமை.இதை அரசால் எந்தக் கட்டத்திலும் மீறமுடியாது.

பிழையான தீர்மானங்களை எடுத்ததால்தான் அந்தத் தலைவர் கடல் வழியாக நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.இதுபோன்ற நிலை தற்போதைய ஜனாதிபதிக்கும் ஏற்படும் என்று தெரிகிறது.

சர்வேதச நாடுகள் எங்களுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்றால் அவர்கள் நம்பக்கூடிய ஆட்சியை எதிர்பார்ப்பார்கள்.

மக்களின் அடிப்படை உரிமையை மீறி இவ்வாறு தேர்தலை ஒத்திப்போட்டால் எப்படி அவர்கள் இந்த அரசை நம்புவார்கள்எப்படி உதவி செய்வார்கள்?

இந்த அரசின் செயற்பாடுகளுக்கு மக்களிடம் வரவேற்பில்லை. அரசிடம் வாக்கு பலம் இல்லை.அதனால்தான் அவர்கள் தேர்தலை ஒத்திப்போடுகிறார்கள்.

imf இடம் நாம் நிதி கேட்டுச் சென்றதன் பின்தான் பங்களாதேஸ் சென்றது. ஆனால், அவர்கள் முதலாவது தவணை நிதியை பெற்றுவிட்டார்கள்.எமது விவகாரம் இன்னும் இழுபறியிலேயே உள்ளது.

இந்த அரசுமீது நாட்டு மக்களின் விசுவாசம் இன்மையே இதற்கு காரணம்.சர்வதேச உதவி கிடைக்க வேண்டும் என்றால் உள்நாட்டு மக்களும் சர்வதேசமும் நம்பக்கூடிய அரசு இருக்க வேண்டும்.

ஆனால்,தேர்தலை ஒத்திப்போடப் போட அரசு மீதான சர்வதேசத்தினதும் மக்களினதும் நம்பிக்கை குறையும்.

தேர்தலை ஒத்திப்போட்டால் தேர்தலைக் கேட்டு மக்களால் ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது.தாக்குதல் நடத்தப்படுகிறது. அப்படியென்றால்,மக்களின் உரிமையைப் பாதுகாக்க மக்கள் என்னதான் செய்வது.என்றார்.

ரணில் விக்ரமசிங்க எங்களை அவரது பக்கம் வளைத்துப் போடுவதற்கு முயற்சி எடுக்கிறார்.எங்களது எம்பிக்கள் பலருடன் பேசி இருக்கிறார்.பல பதவிகள் தருவதாகக் கூறி இருக்கிறார்.

மக்கள் ஆணை இல்லாத அரசுடன் நாங்கள் சேர்வதால் இந்தப் பொருளாதார பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை – என்றார்.



## சஜித் அல்லது ரணில் தரப்பு வெல்வதாக இருந்தால் தேர்தலை நடத்தி இருப்பார்கள்

இந்தத் தேர்தலில் சஜித் தரப்போ அல்லது ரணில் தரப்போ வெல்வதாக இருந்தால் தேர்தலை நடத்தி இருப்பார்கள்.இப்படியே சென்றால் நாடாளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் பணம் இல்லை என்று கூறி ஒத்திப்போடப் பார்ப்பார்கள்.என்று ஜேவிபி உறுப்பினர் வசந்த சமரசிங்க கூறினார்.அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலை நடத்தினால் என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.நிச்சயம் ஜேவிபி வெற்றி பெரும்.அதைத் தடுப்பதற்காகத்தான் தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது.

கோத்தாவை விரட்டுவதற்காகவே மக்கள் வீதிக்கு இறங்கினார்கள். ரணிலை ஜனாதிபதியாக்குவதற்காக அல்ல.ஆனால்,ராஜபக்ஸ குடும்பம் அவர்களின் பாதுகாப்புக்காக ரணிலை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது.

ராஜபக்ச குடும்பத்தை பாதுகாத்து-தேர்தலை ஒத்திப்போட்டு ரணில் மொட்டுக்கட்சிக்கு ஏற்றவாறு செயற்படுகிறார்.

இந்தத் தேர்தலில் சஜித் தரப்போ அல்லது ரணில் தரப்போ வெல்வதாக இருந்தால் தேர்தலை நடத்தி இருப்பார்கள்.இப்படியே சென்றால் நாடாளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் பணம் இல்லை என்று கூறி ஒத்திப்போடப் பார்ப்பார்கள். ரணில் விக்ரமசிங்க 2015 இல் இருந்து 2019வரை பிரதமர்.இலங்கை வரலாற்றில் அதிக கடன் வாங்கியது அவர்தான் – என்றார்.

தொடர் 02...



# அலரிமாளிகைக்குள் அன்றிரவு...

### மஹிந்தவை குழப்பிய ஜோன்ஸன்

மே 9 ஆம் திகதி விலகுதல்.முடிவுக்கு வருகிறார் மஹிந்த...

அதற்கு முன் மஹிந்தவை சந்திக்கிறார்கள் ஜோன்ஸன் குழுவினர்.

“சேர் விலக வேண்டாம்.நாங்கள் உங்களுக்கு ஆதரவாக 25 ஆயிரம் பேரை அலரிமாளிகைக்கு அழைத்து வருகிறோம்.”

“ஊர்வலமாகச் சென்று ஜனாதிபதியிடம் உங்களுக்கான ஆதரவைக் காட்டுவோம். உங்களை விலக்க வேண்டாம் என்று கூறுவோம்.“‘‘

இப்போது இரண்டு மனம் மஹிந்தவுக்கு. என்ன செய்வது...?

சரி... வரட்டும்.. பார்ப்போம்..

அந்த மக்கள் சந்திப்பின் பின் முடிவெடுப்போம்...

கிடப்பில் போடுகிறார் தீர்மானத்தை... 9 ஆம் திகதிவரை...

### ஜோன்ஸனின் காலில் வீழ்ந்த எம்பிக்கள்

தடபுடல் ஏற்பாடு. மக்களை அலரிமாளிகைக்கு அழைத்து வருவதற்கு...

அலரிமாளிகைக்கு மாத்திரம் அழைத்து வருவதென்றால் பரவாயில்லை. வன்முறைக்கும் அல்லவா ஏற்பாடு.

இந்தக் கூட்டத்தோடு.. கோட்டா கோ கம-மைனா கோ கம எல்லாவற்றையும் கிளியர் பண்ணிவிட வேண்டும்.

அதற்கான ஏற்பாடு தீவிரம். அடியாட்கள் எல்லாம் உஷார்.

இதை அறிகிறார்கள் கோட்டா ஆதரவு எம்பிக்கள்.

இது மிகப் பாரதூரமான முடிவு. நாடு இப்போது இருக்கும்நிலையில்,இங்கு கை வைத்தால் நாட்டில் வன்முறை வெடிக்கும்.

அரசுமீது கோபம்கொண்டுள்ள மக்கள் அதற்கான சந்தர்ப்பதை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

இதை உடன் நிறுத்த வேண்டும்.

கெஞ்சிகிறார்கள் ஜோன்ஸனிடம்...

இப்படி பஸ்களில் ஆட்களை அழைத்து வரவேண்டாம் .பெரும் பிரச்சினை ஏற்படும்.எங்களால் ஊருக்குச் செல்ல முடியாமல் போகும்.மக்கள் எம்மைத் தாக்குவார்கள் என்கிறார்கள் அவர்கள்.

அதை நக்கலாகப் பார்க்கிறார் ஜோன்ஸ ன்.

“உங்களது தலைவர் கோட்டாவுக்கு முதுகெலும்பு இல்லை.நான் ஒரு மணிநேரத்தில் காலிமுகத்திடலையும் மைனா கோகமவையும் கிளியர் பண்ணித் தாரேன் .காலையில் அங்கு 150 பேர் மட்டுமே இருப்பார்கள்” என்கிறார்.

அவ்வளவு நம்பிக்கை அவருக்கு.பின் விளைவு தெரியாமல்...

இதில் அவர் வெற்றிகண்டால்... அரசுக்குள் அவர்தான் கிங். பெரிய தலைகள் இன்னும் அவரை அரவணைத்துக்கொள்ளும்...

இந்த ஆசையோடுதான் இறங்குகிறார் களத்தில்...

### ஜனாதிபதியின் கவனத்துக்கு...

இது வேலைக்கு ஆகாது.தலைவர்தான் இதைத் தடுக்க வேண்டும்.ஜனாதிபதியிடம் எத்திவைக்கிறார்கள் எம்பிக்கள்.

அவர் அஞ்சுகிறார்.பின்விளைவை உணருகிறார்.

உத்தரவு போடுகிறார்.எவரையும் அழைத்து வரவேண்டாம் என்கிறார்.

மீறப்படுகிறது உத்தரவு.திட்டமிட்டபடியே நிகழ்வு.

### ரணிலிடம் மன்றாட்டம்

மே 9 ஆம் திகதி. நிறைகிறது கூட்டம் அலரிமாளிகையில்...

உஷாராகிறார் மஹிந்த கூட்டத்தைக் கண்டதும்...

மஹிந்த என்ன பேச வேண்டும்...எப்படிப் பேச வேண்டும் ...

பேச்சைத் தயாரித்து வைத்திருக்கிறார் ஜோன்ஸன்.

அந்தப் பேச்சுதான் மஹிந்தவின் உரை.

பேச்சின் முக்கிய அம்சமே அவர் விலகமாட்டார் என்பதுதான்.

கூட்டம் முடிந்துவிட்டது..

இப்போது மைனா கோ கம-கோட்டா கோ கம இரண்டின்மீதும் தாக்குதல் நடத்த ஏற்பாடு..

இதைத் தடுக்க வேண்டும்.இல்லையேல் எமக்கே ஆபத்தைக் கொண்டுவரும்.

ஜனாதிபதியைத் தொடர்புகொள்கிறார்கள் பொதுஜன பெறமுண எம்பிக்கள் சிலர்.

முடியவில்லை...

மாற்றுவழி...?

தொடர்புகொள்கிறார்கள் ரணிலை.... லைனுக்கு வருகிறார்.

விளக்குகிறார்கள் விபரீதத்தை....

மஹிந்தவிடம் கூறி இதை நிறுத்தச் சொல்லுங்கள் என்கிறார் ரணில்.

“நாங்கள் சொல்லி கேட்கும் நிலையில் அவர் இல்லை.ஜனாதிபதியைத் தொடர்புகொள்ளும் வாய்ப்பும் இப்போது இல்லை நீங்களே மஹிந்தவிடம் சொல்லுங்கள்.இல்லையேல் ஜனாதிபதியிடம் சொல்லுங்கள்....” என்கிறார்கள்.

அவ்வாறே செய்கிறார். தொடர்புகொள்கிறார் ஜனாதிபதியை.

உடனே லைனுக்கு வருகிறார் அவர்.

தாக்குதல் திட்டம்பற்றிக் கூறுகிறார்.

“கோட்டா கோ காம போராட்டம் அமைதியான முறையில் இடம்பெறுகிறது. அவர்களால் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. இதனால் அந்தப் போராட்டத்துக்கு நாடுபூராகவும் ஆதரவு உண்டு. அதில் கை வைக்க வேண்டாம். கை வைத்தால் நாடு பற்றி எரியும்.” என்றார் ரணில்.

அதை ஏற்றுக்கொள்கிறார் கோட்டா. பின்னர் அவரை சந்திக்க வருமாறு கூறுகிறார்.

### ஜனாதிபதியின் உத்தரவையும் மீறித் தாக்குதல்

கூட்டம் முடிந்துவிட்டது... அலரிமாளிகையில்...

இப்போது நுழைகிறார்கள் மஹிந்தவின் காடையர்கள் மைனா கோ கம-கோடா கோ கம பகுதிக்குள்.கடும் தாக்குதல் அங்குள்ளவர்கள்மீது...

தடுப்பதற்கு ஒருபுறம் ஜனாதிபதி நடவடிக்கை.மறுபுறம் காடையர்களர்கள் தாக்குதல்.

ஜனாதிபதி உத்தரவிட்டும் ஏன் அதை பொலிஸார் தடுக்கவில்லை ?

மேல் மாகாணத்துக்கு பொறுப்பாகவிருந்த பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் அதற்கான காரணத்தை சிசிடியினரிடம் விளக்கியுள்ளதை பின்னர் நாம் அறிந்தோம்.

தாக்குதல் முடிந்துவிட்டது.அங்கிருந்து வெளியேறுகிறார்கள் அந்தக் காடையாட்கள்.

தொலைக்காட்சிகளில் - சமூக ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு இவை.

அவ்வளவுதான்...

பொங்கி எழுகிறார்கள் அதைப் பார்த்த மக்கள்.

சற்றும் எதிர்பார்க்கவில்லை.

உடனே எதிர்விளைவு.எல்லோரும் வீதிக்கு

விரைகிறார்கள் காலிமுகத் திடலை நோக்கி...அலறி மாளிகை பகுதியை நோக்கி...

**“கோட்டா கோ காம போராட்டம் அமைதியான முறையில் இடம் பெறுகிறது. அவர்களால் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. இதனால் அந்தப் போராட்டத்துக்கு நாடுபூராகவும் ஆதரவு உண்டு.அதில் கை வைக்க வேண்டாம்.கை வைத்தால் நாடு பற்றி எரியும்.” என்றார் ரணில். அதை ஏற்றுக் கொள்கிறார் கோட்டா.**

ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்







தேர்தலை ஒத்திப்போடுவதால் உங்களது கட்சிக்கு நன்மை இல்லையா?

எதிர்க்கட்சி எம்பிக்கள் தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்கிறார்கள் என்று ஜனாதிபதி நாடாளுமன்றில் கூறினார். நீங்களும் அப்படி கேட்டீர்களா?

உங்களின் கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் அமைச்சுப் பதவிகள் கேட்டதாக மஹிந்தானந்த அழுத்கமே கூறுகிறாரே?

மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு உங்களது கூட்டமைப்புக்கு சிக்கலை ஏற்படுத்தவில்லையா?

மஹிந்தவை பிரதமராக்குவதற்கு உங்கள் கூட்டமைப்பின் உதவியைக் யகேட்டதாக சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.இது உண்மையா? உங்கள் கூட்டமைப்புக்கு ஏன் தலைவர் இல்லை?

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரியா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் டலஸ் அழகப்பெரும.அவரது பேட்டியின் முழு விவரம் கீழே..

கேள்வி : தேர்தலை ஒத்திப்போடுவதால் உங்களது கட்சிக்கு நன்மை இல்லையா?

பதில் : தோல்வி பயம் உள்ளவர்கள்தான் தேர்தலை வெறுப்பார்கள்.தனிப்பட்ட அரசியல் லாபத்தை விட ஜனநாயகத்தையே நாம் பார்க்கிறோம்.

இப்போது உள்ளூராட்சி சபைகள் இல்லைமாகாண சபைகள் இல்லை. நாடாளுமன்றத்தை விரும்பிய நேரம் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் இப்போது வந்துவிட்டது.

இவ்வாறு மக்கள் சபைகள் இயங்காமல் கிடப்பது ஜனநாயகம் இல்லை.ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவே தேர்தலை கேட்கிறோம்.

அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக நாம் தேர்தலை கேட்கவில்லை.

கேள்வி : எதிர்க்கட்சி எம்பிக்கள் தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்கிறார்கள் என்று ஜனாதிபதி நாடாளுமன்றில் கூறினார்.நீங்களும் அப்படி கேட்டீர்களா?

பதில் : கனவிலும் இல்லை.அவர் நகைச்சுவையாக-பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை தெரிவிக்கிறார்.மக்கள் ஆணையை நிராகரிக்கப் பார்க்கிறார்.

கடந்த காலங்களில்-வலாற்றில் அவ்வாறு செய்ததால் இந்த நாடு பெரும் அழிவுகளை சந்தித்தது. அதே அழிவுகள் ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது.

கேள்வி : உங்களின் கட்சி எம்பிக்கள் ஜனாதிபதியிடம் அமைச்சுப் பதவிகள் கேட்டதாக மஹிந்தானந்த அழுத்கமே கூறுகிறாரே?

பதில் : அவரது பேச்சை எப்படி நம்புவது? நாங்கள் 13 பேர் அரசில் இருந்து விலகி வந்தோம்.அவர்களுள் 5 பேர் அமைச்சுப் பதவியை தூக்கி வீசிவிட்டு வந்தனர்.

அமைச்சுப் பதவி தேவை என்றால் நாங்கள் அரசுடன் இருந்திருப்போமே. எதற்காக நாம் வெளியே வர வேண்டும்?

ரணிலுடன் அமைச்சுப் பதவி கேட்டு இரவில் பேச வேண்டுமா? அப்படியே இருக்க முடிந்ததுதானே.

நாம் அமைச்சுப் பதவி கேட்டோம் என்பது பொய்.அரசியலில் இப்படி சேறு பூசுவது சாதாரண விடயம்.

கோத்தாபய ராஜபக்ச முழு பொருளாதாரத்தையும் நாசமாக்கினார். ரணில் முழு அரசியலையும் நாசமாக்குகிறார்.

கேள்வி : மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு உங்களது கூட்டமைப்புக்கு சிக்கலை ஏற்படுத்தவில்லையா?

பதில் : ஆமாம்..அது பிரச்சினையாக அமைந்தது.நாம் 11 ஆம் திகதி கூட்டமைப்பை அமைத்தோம்.12ஆம் திகதி தீர்ப்பு வெளியானது.

உண்மையில் இந்தத் தீர்ப்பானது எமது கூட்டமைப்புக்கு கடும் தாக்குதலாக அமைந்தது.

எமது கூட்டமைப்பில் உள்ள கிறிஸ்தவ எம்பிக்களுக்கு தனிப்பட்டமுறையில் தாக்கம் ஏற்பட்டது.பிரசார நடவடிக்கைகளுக்கு வருவதில்லை என்றும் அவர்கள் தீர்மானித்தனர்.

பல பிரதேசங்களில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம்.

கேள்வி : உங்களது சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவா?

பதில் : இதுபற்றி நாம் அறவே பேசவில்லை.நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையால் இந்த நாட்டுக்கு ஏற்பட்ட அழிவு இனியும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன்.

நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு இப்போது ரணில் விக்ரமசிங்க செய்வதைப் பாருங்கள். தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை அறிவிக்கிறார்.ரணில் இல்லை என்கிறார்.

அந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியே இவ்வாறு செய்கிறார்.

இந்த நிறைவேற்று அதிகாரம் இந்த நாட்டுக்குச் செய்த அநியாயம் அதிகம்.

நான் ஜனாதிபதியாகி இருந்தால் இறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி நானாகத்தான் இருந்திருப்பேன்.

1994 இல் இருந்து போட்டியிட்ட எல்லா ஜனாதிபதி வேட்பாளர்களும் முதலில் வழங்கிய வாக்குறுதி நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்பதுதான்.ஆனால்,எந்த ஜனாதிபதியும் அதைச் செய்ததில்லை.

நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.அந்த அரசமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

ரணில்,மஹிந்த,மைத்திரி,சந்திரிகா இப்படி எல்லோருக்கும் சொல்கிறேன். மீண்டும் ஜனாதிபதியாவதற்கு முயற்சிக்க வேண்டாம்.அடுத்த தலைமுறையிடம் இதை ஒப்படைப்போம்.இப்போது நாட்டுக்குத் தேவை புதிய முறைமையாகும்.

கேள்வி : அடுத்த தலைமுறை என்று நீங்கள் சொல்வது அரசியல்வாதிகளின் பிள்ளைகளா?

பதில் : இல்லை.அதனால்தான் இந்த நாட்டுக்கே அழிவு.குடும்பங்கள்தான் இந்த நாட்டை அதிகமாக ஆட்சி செய்திருக்கின்றன.உலக நாடுகளில் இப்படியான நிலை இல்லை.ஒன்று அல்லது இரண்டு குடும்பங்கள்தான் ஆட்சி செய்திருக்கின்றன.

இலங்கையின் நிலைமை வேறு. அந்த நிலைமை இனி மாற வேண்டும்.

கேள்வி : உங்களது பரம்பரையும் அரசியலுக்கு வருமா?

பதில் : ஒருபோதும் இல்லை.முதலும் நானே.முடிவும் நானே.இது என்னோடு முடிந்துவிடும்.நான் பொறுப்புடன் கூறுகிறேன்.

கேள்வி : மஹிந்தவை பிரதமராக்குவதற்கு உங்கள் கூட்டமைப்பின் உதவியைக் கேட்டதாக சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.இது உண்மையா?

பதில் : ஆம்..இதுபற்றி நான் அவரிடம் கேட்டபோது அப்படித்தான் சொன்னார்.அடுத்தது மஹிந்த பிரதமராகப் போகிறார் என்று பல மாதங்களாக கதை அடிபடுகிறது.

கேள்வி : உங்கள் கூட்டமைப்புக்கு ஏன் தலைவர் இல்லை?

பதில் : வேலைத் திட்டங்கள் எதுவும் இல்லாமல் தலைவர்களை மாத்திரம் பார்த்து வாக்களித்தவர்களுக்கு-தலைவர்களை மாத்திரம் சந்தைப்படுத்தியவர்களுக்கு எமது இந்த புதிய முறைமை சிக்கல்தான்.

எமக்குத் தலைவர்கள் இல்லாமல் இல்லை.சிறந்த தலைவர்கள் உள்ளார்கள்.ஜீ.எல்.பீரிஸ்,,டியூ குணசேகர ஆகியோர் நல்ல அனுபவம் வாய்ந்த-திறமையான தலைவர்கள்.

தலைவர்களை நியமிக்காது தலைமைத்துவ சபையை நிறுவியுள்ளோம்.எமக்கு அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

அவசியம் ஏற்படும்போது தலைவர் ஒருவரை நியமிப்போம் - என்றார்.

**ரணில், மஹிந்த, மைத்திரி, சந்திரிகா இப்படி எல்லோருக்கும் சொல்கிறேன். மீண்டும் ஜனாதி பதியாவதற்கு முயற்சிக்க வேண்டாம். அடுத்த தலை முறையிடம் இதை ஒப்படைப்போம். இப்போது நாட்டுக்குத் தேவை புதிய முறைமை யாகும்.**

# தினேஷை விரட்டும் ராஜபக்ஷ குடும்பம்



மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவதற்கான முயற்சி ஒன்று இடம்பெற்று வருவது எல்லோரும் அறிந்த விடயம்.

தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுக்கும்போது ஜனாதிபதி பதவியோ,பிரதமர் பதவியோ மஹிந்தவின் கையில் இருக்க வேண்டும்.அப்போதுதான் தேர்தலை இலகுவாக–வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்று என்பது பசில் உள்ளிட்ட மொட்டு கட்சி முக்கியஸ்தர்கள் பலரின் கருத்து.

அப்படியென்றால் பிரதமர் பதவியை தினேஷிடம் இருந்து பெற வேண்டும்.

ராஜபக்ச குடும்பத்தினர் தினேஷை சந்தித்து இந்த விடயத்தைக் கூறினர்.

முதலில் அவர் எந்த பதிலும் வழங்கவில்லை.

ராஜபக்ச குடும்பம் விடுவதாக இல்லை.பல தடவைகள் தகவல் அனுப்பிவிட்டன. தொடர்ந்து தினேஷை விரட்டுகிறார்கள்.

ஆனால்,தினேஷ் ஆம் என்றும் சொல்லவில்லையாம்.இல்லை என்றும் சொல்லவில்லையாம்.

**துப்பறிவாளன்**

# கோத்தா இப்போது அந்த வீட்டில்...



கோத்தா ஜனாதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு ஓடி மீண்டும் நாட்டுக்குத் திரும்பியதும் அவர் தங்குவதற்கு பாதுகாப்பான வீடு ஒன்று தேவைப்பட்டது.

மிரிஹானாவில் உள்ள அவரது சொந்த இல்லத்தில் தங்க முடியாது. பாதுகாப்பு பிரச்சினை

இதனால் அரசால் அவருக்கு பௌத்தலோகா மாவத்தையில் உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று வழங்கப்பட்டது.

அந்த பகுதியில் வாகனச் சத்தம் அதிகம் என்பதால் வேறு இடத்தில்–அமைதியான இடத்தில் வீடு ஒன்றை வழங்குமாறு கோத்தா பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அவை எவையும் கணக்கில் எடுக்கப்படவில்லை.

அப்போது விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஸவின் உத்தியோகபூர்வ இல்லம் திருத்தி அமைக்கப்பட்டுக்கொண்டிருந்ததால் மஹிந்த புல்லர்ஸ் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தங்கி இருந்தார்.இப்போதும் அங்குதான்.

அது கோத்தா விரும்புவதுபோன்ற அமைதியான இடம்.

வீடு திருத்தி முடிந்துவிட்டால் மஹிந்த அந்த வீட்டுக்குப் போய்விடுவார்.அவர் போனதும் இந்த புல்லர்ஸ் வீதி வீட்டை வழங்குமாறு கோத்தா கேட்டிருந்தார்.

இந்த நிலையில்,மஹிந்தவின் விஜேராம வீட்டின் திருத்த வேலைகள் முடிந்துவிட்டன.மஹிந்த அங்கு சென்றுவிடுவார்.

அப்படிச் சென்றதும் மஹிந்த இப்போது இருக்கும் புல்லர்ஸ் வீதி வீட்டை தனக்கு வழங்குமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோத்தா மீண்டும் கேட்டார். எந்த பதிலும் இல்லை.

அது கிடைக்காது என்பது கோத்தாவுக்கு விளங்கிவிட்டது. வேறு வழியில்லை. மிரிஹானையில் உள்ள கோத்தாவின் சொந்த வீட்டுக்கே போவதென்று முடிவெடுத்தார்.

பாதுகாப்பு பிரச்சினை இருந்தாலும் பரவாயில்லை என்று இப்போது மிரிஹான வீட்டுக்கே குடியேறிவிட்டார் கோத்தா.

# நாடாளுமன்றம் port city இல்...



அரச எம்பிக்களின் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஓரிரு நாட்களுக்கு முன் இடம்பெற்றது.

துறைமுக நகரத்தில் எப்படி முதலீடு செய்வது என்பதுபற்றித்தான் அக்கூட்டத்தில் பேசப்பட்டது. துறைமுக அதிகார சபையின் முன்னாள் தலைவர் பிரையன் பந்துவும் அக்கூட்டத்துக்கு அழைக்கப் பட்டிருந்தார்.

அவர் துறைமுக நகர் முதலீடு பற்றி விளக்கம் கொடுத்தார்.இதில் செய்யப்படும் முதலீடுகள் அனைத்தும் வெளிநாட்டு முதலீடுகளாகும்.எல்லாம் டொலர் மூலமே செய்யப்படும். இலங்கை நாணயம் கிடையாது.

துறைமுக நகர் முழுக்க முழுக்க இலங்கை அரசுக்கே சொந்தமாக இருப்பதால் அணைத்து டொலர்களும் அரசுக்கே கிடைக்கும் என்றார்.

அப்போது ஜனாதிபதி நகைச்சுவையாக ஒரு யோசனை சொன்னார்.

“அநியாயம்..நாடாளுமன்றத்தை துறைமுக நகருக்கு மாற்றினால் எம்பிக்கள் எல்லோரும் டொலரில் சம்பளம் பெறலாமே... என்றார்.

# ஜீ.எல்.க்கு எதிர்ப்பு



பெப்ரவரி 20 ஆம் திகதிக்கு பின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியிடம் செல்வதால் அவர் நாடாளு மன்றத்தைக் கலைக்க வேண்டும் என்று ஜீ.எல் பீரிஸ் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்திக் கூறினார்.

இதனால் அவரது கட்சிக்குள்ளேயே அவருக்கு எதிர்ப்பு எழுந்துள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்தால் பலரது எம்பி பதவிகள் பறிபோகும். அதனால்தான் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்தான் இப்போது தேவை.நாடாளுமன்றத் தேர்தல் அல்ல.இவரை யார் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு கேட்கச் சொன்னது என்று புலம்புகிறார்கள் ஹெலிகொப்டர் கூட்டணி எம்பிக்கள்.

# நாமல் கடும் வேல...



கடந்த வாரம் நாமல் ராஜபக்சவை நாடாளுமன்றில் காணவில்லை.

அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு வினவினர் சக எம்பிக்கள்.

“என்ன நாமல் காணல்ல இந்தப் பக்கம்...”

“நான் இந்தப் பக்கம் கடும் வேல.. ஹம்பாந்தோட்ட பக்கம்... காலையில இருந்து நள்ளிரவு வரைக்கும் கிராம மட்டத்தில் இருந்து வேல.. அப்பதானே வெல்லலாம்...” என்றார் நாமல்.

“ஓம் ஓம்..அதுதான் சரி.நாங்களும் வாரம்.டைம் கிடச்சா...” சக எம்பிக்கள்.



# சுடுமாறு உத்தரவிட்டார் கோத்தா

- எம்பிக்களின் வீடுகளை எரித்தவர்கள்–அமரக்கீர்த்தி அத்துகோரல எம்பியை கொன்றவர்கள் யார்?
- உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டிருந்தால்...?
- ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் யாரும் உங்களிடம் ரகசியமான முறையில் தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்டுள்ளார்களா?
- மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதற்கு நீங்கள் சன்ன ஜயசுமனவிடம் ஆதரவு கேட்டதாக அவர் கூறியுள்ளாரே
- எப்போது அமைச்சராகப் போகிறீர்கள் ?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதிலளித்தார் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸாநாயக்க. அவரது பேட்டி கீழே...

**கேள்வி : அரசின் தோல்வி பயம் காரணமாகவா தேர்தல் ஒத்திப்போடப்பட்டுள்ளது?**

பதில் : இல்லை.69 லட்சம் வாக்குகளை பெற்ற நாம் ஒரே அடியில் வீழ்ந்துள்ளோம்.அதலபாதாளத்துக்குள் சென்றுள்ளோம்.

இருந்தாலும்,எமது கட்சி ஆதரவாளர்கள் எம்மை விட்டுப் போகவில்லை.அவர்கள் எமக்கு ஏசி ஏசி அப்படியே இருக்கிறார்கள்.இறங்கி வேலை செய்தால் அவர்களை மீண்டும் எம் பக்கம் ஈர்க்க முடியும்.

அதனால் தோல்வி பயம் ஒன்று எமக்கு இல்லை.

நாங்கள் தேர்தல் கட்டாயம் நடக்கும் என்று நினைத்துத்தான் முதலில் கட்டுப்பணம் செலுத்தினோம்.தேர்தலை ஒத்திப்போடும் தேவை அரசுக்கு ஏற்பட்டால்கூட அது முடியாமல் போகும் என்றே நாங்கள் நினைத்தோம்.

**கேள்வி : எம்பிக்களின் வீடுகளை எரித்தவர்கள்–அமரக்கீர்த்தி அத்துகோரல எம்பியை கொன்றவர்கள் யார்?**

பதில் : இரண்டையும் செய்தவர்கள் ஜேவிபிதான்.நான் மட்டுமல்ல எல்லோரும் அவர்களைத்தான் சொல்கிறார்கள்.

அவ்வாறு அட்டகாசம் புரிந்தவர்கள் பலர் ஜேவிபியின் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல காலிமுகத் திடல் போராட்டத்தில் புலிகளும் கலந்துகொண்டனர்.புலிகள் இன்னும் செயற்படுகிறார்கள். மேலும்,அடிப்படைவாத முஸ்லிம்களும் அங்கு இருந்தனர்.

கோத்தாவால் அவர்களை விரட்ட முடியாமல் போனது. 200 பேர் அளவில்தான் இருக்குறார்கள்.அவர்களை விரட்டத் தேவை இல்லை என்று நினைத்தார்.

எம்பிக்களின் வீடுகள் எரிக்கப்பட்ட அந்த இரவு எரியூட்டியவர்களை விரட்டுமாறும்–அவர்களை சுடுமாறும் கோத்தா இராணுவத்திற்கு உத்தரவிட்டார்.

ஒரு பைத்தியக்காரன்போல் எல்லா பக்கமும் தொலைபேசி அழைத்து எடுத்து உத்தரவிட்டார்.ஆனால்,இராணுவ அதிகாரிகள் அந்த உத்தரவை ஏற்கவில்லை.

இது தொடர்பில் நான் அறிந்த எல்லாவற்றையும் வெளியே சொல்லமாட்டேன்.

இறுதியாக கோத்தாவுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் யார்? அவரை வந்து சந்தித்த வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் யார்? யாரை பதவியை விட்டு ஓடுமாறு கூறியவர்கள் யார்? இதற்கு பின்னால் உள்ள சதி என்ன?

எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால்,நான் எல்லாவற்றையும் சொல்லமாட்டேன்.

ஆனால்,ரணில் விக்ரமசிங்க சரியான முடிவை எடுத்தார். ஜனாதிபதியாகி மறுகணமே காலிமுகத் திடல் போராட்டக்காரர்களை விரட்டியடித்தார். அவர்தான் சரியான முடிவை எடுத்தார்.

அவர் சரியான பாதையில் அரசைக் கொண்டு செல்கிறார்.அவரை நாம் ஜனாதிபதியாக நியமித்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

அவர் சீனாவுடனும் உறவைப் பேணுகிறார். இந்தியாவுடனும் உறவைப் பேணுகிறார்.அதேபோல்,ஜப்பான்,அமெரிக்கா,ஐரோப்பா உள்ளிட்ட அணைத்து நாடுகளையும் நற்பு வளையத்துக்குள் வைத்துள்ளார்

**கேள்வி : உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டிருந்தால்...?**

பதில் : மொட்டுக்கு ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் சமமான போட்டியிருந்திருக்கும்.ஜேவிபியும் கிட்டே நெருங்கி இருப்பார்கள்.ஹெலிகொப்டர் காணாமல் போயிருக்கும்.ஓர் இடத்தில்கூட வென்றிருக்கமாட்டார்கள்.

ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதே நிலைதான். அவர்களுக்கும் இடமில்லை.

சில இடங்களில் நாம் வெற்றிருப்போம். சில இடங்களில் ஐக்கிய மக்கள் சக்தி வென்றிருக்கும்.ஜேவிபியின் வாக்கு வங்கி அதிகரித்திருக்கும்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தி எம்பிக்கள் யாரும் உங்களிடம் ரகசியமான முறையில் தேர்தலை ஒத்திப்போடுமாறு கேட்டுள்ளார்களா?**

பதில் : அப்படி இல்லை.இருந்தாலும் தேர்தலை நடத்துவதை அவர்கள் உண்மையில் விரும்பவில்லை. அவர்களுக்கு பயம்.காரணம் முழுமையான வெற்றியை அவர்களால் பெற முடியாமல் போகும் என்பதால்...

> இறுதியாக கோத்தாவுக்கு ஆலோசனை வழங்கியவர்கள் யார்? அவரை வந்து சந்தித்த வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் யார்? யாரை பதவியை விட்டு ஓடுமாறு கூறியவர்கள் யார்? இதற்கு பின்னால் உள்ள சதி என்ன? எல்லாம் எனக்குத் தெரியும்.

**கேள்வி : தேர்தல் நடக்காது என்று உங்களுக்கு உள்ளகத் தகவல் தெரிவித்ததா?**

பதில் : இல்லை..தேர்தலை ஒத்திப்போடுவதற்கான தேவை இருந்தாலும்,அது முடியாமல் போகும் என்றே நான் நினைத்திருந்தேன். வரலாற்றில் அப்படி அனுபவம் இருக்கு எங்களுக்கு.

**கேள்வி : மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குவதற்கு நீங்கள் சன்ன ஜயசுமனவிடம் ஆதரவு கேட்டதாக அவர் கூறியுள்ளாரே?**

பதில் : அது பொய்.கட்சிக்குள் இதுபற்றிப் பேசப்படவில்லை.

**கேள்வி : எப்போது அமைச்சராகப் போகிறீர்கள் ?**

பதில் : விரைவில் கிடைக்கும்.இப்போது இருக்கும் அமைச்சரவையைத் திருத்தி நல்லதோர் அமைச்சரவையை அமைக்கும் தேவை ஜனாதிபதிக்கு உண்டு.

இப்போது இருக்கின்ற அமைச்சரவை அங்கும் இங்குமாக புறக்கி எடுத்து நிரப்பியது.அப்போது கோத்தாபய சிரேஷ்ட அமைச்சர்களை நீக்கி இளம் உறுப்பினர்களை அமைச்சர்களாக நியமித்துக்கொண்டார்.

என்னை அமைச்சராக நியமித்தால் எடுத்து வேலை செய்வேன்.அபிவிருத்தி செய்யக்கூடிய அமைச்சாக இருந்தால் நல்லது.அப்படிப்பட்ட அமைச்சு மீதுதான் எனக்கு விருப்பம் அதிகம்.

10 அமைச்சுக்கள் இந்த மாதம் நியமிக்கப்படும் – என்றார்.








கொழும்பு 12 புதுக்கடை சென்.செபஸ்த்தியன் சிங்கள வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் சித்தியெய்திய 5ஆம் ஆண்டு மாணவர்களை பாராட்டும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் ரோசனி பரினா தலைமையில் பாடசாலையில் 02.03.2023 நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பிணர் ஏ.எச்.எம். பௌசி பிரதம அதிதியாகக் கலந்து புலமைப்பரிசில் சிங்கள மொழிமூலம் 10க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு பரிசும், சான்றிதழ் வழங்கி வைத்தார். அத்துடன் கொழும்பு மத்திய பிரதேசத்தின் உதவிப் கல்விப் பணிப்பாளர் ரன்ஜித் பிரேமதிலக்க, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பிணர்கள் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

(அஷ்ரப் ஏ சமத்)



# DFCC வங்கி – CDB கூட்டிணைவு

DFCC வங்கி வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு பணம் அனுப்பும் சேவையை மேம்படுத்துவதற்காக, CDB உடன் கைகோர்த்துள்ளது.

Lanka Money Transfer (LMT) தளத்தில் கூட்டாளராக மாறும் 10 வது நிதி நிறுவனமாக CDB மாறியுள்ளதுடன், இத்தளமானது DFCC வங்கியால் வடிவமைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு மற்றும் இயக்கப்படும் ஒரு விரிவான, பாதுகாப்பான, தங்குதடையற்ற மற்றும் நம்பகமான பணம் அனுப்பும் சேவைக்கான தளமாகும்.

பரஸ்பர நன்மைகளை ஈட்டும் நோக்கில் இந்த இரண்டு நிதிச் சேவை நிறுவனங்களுக்கிடையில் வலுவான பிணைப்பை உருவாக்குவதே இந்த கூட்டாண்மையின் நோக்கமாகும்.

DFCC வங்கியின் டுஆவு என்ற வெளிநாடுகளிலிருந்து பணத்தை அனுப்புவதற்கான தளம் வழியாக ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார், ஓமான், இஸ்ரேல், அவுஸ்திரேலியா, ஜப்பான், ஹொங் கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் சேகரிப்பு மையங்களை இது மேலும் விரிவுபடுத்துவதுடன், வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மூலமாக பணத்தை அனுப்ப விரும்புகின்ற வாடிக்கையாளர்களையும் சென்றடைகிறது.

# GOODLIFE X மற்றும் SLTC உடன்படிக்கை

இலங்கையின் முன்னணி புத்தாக்க மற்றும் அபிவிருத்தி வழிகாட்டியாகத் திகழும் Good Life X (GLX) இனால், இலங்கை தொழில்நுட்பவியல் கம்பஸ் (SLTC) உடன் பங்காண்மை உடன்படிக்கையில் கவனம் செலுத்தும் வளர்ச்சி தேவைப்படும் காலகட்டத்தில் இந்த பங்காண்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர்கள் தொழில்முயற்சியாண்மை மற்றும் புத்தாக்கம் தொடர்பான



கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அதனூடாக, நாட்டில் தொழில்முனைவோர் சூழல்கட்டமைப்பை வலிமைப்படுத்தவும் அடுத்த தலைமுறை புத்தாக்க சிந்தனையாளர்களை கட்டியெழுப்பவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இலங்கையின் பொருளாதாரத்துக்கு புதிய புத்தாக்க சிந்தனை அடிப்படையிலான மீள்செயற்படுத்தக்கூடிய மற்றும் நிலைபேறான வியாபார செயன்முறைகளில் வகுப்புகளை பின்பற்றும் போதிலும், பிரயோக அனுபவம் மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்துள்ளது. GLX மற்றும் SLTC இடையிலான பங்காண்மையினூடாக இந்த இடைவெளியை சீர்செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், கம்பஸ் மாணவர்கள் மத்தியில் பிரயோக திறன்களை கட்டியெழுப்புவதுடன், நிஜ உலகில் சவால்களுக்கு முகங்கொடுக்க உதவுவதாக அமைந்துள்ளது.

வர்த்தக சுடர்

# கொழும்பு துறைமுக நகர் வெளிநாட்டு முதலீட்டை நோக்கி

இவ் வருடம் (2023) ஜனவரி மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமானது கொழும்பு துறைமுக நகரில் முதலீட்டினை மேற்கொள்ள முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குகின்றது.

இந்த இணையமானது துறைமுக நகரம் தொடர்பாக கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்துவதற்கான தொடர்பு மையங்களையும் இணைக்கின்றது. துறைமுக நகரமானது வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்கும் உலகளாவிய பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இதுவொரு முன்னேற்றத்தை நோக்கிய முக்கிய நகர்வாக கருதப்படுவதோடு, பலர் இதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மேலும் அண்மையில் ஐக்கிய அரபு இராச்சியம், தாய்லாந்து, ஈரான் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக பலர் தங்கள் தெரிவுகளை ஆராய தனிப்பட்ட முறையில் வருகை தந்தனர்.

பல்வேறு வரிக் கொள்கைகளை மேற்கோள் காட்டி, கொழும்பு துறைமுக நகரின் எல்லைக்கு வெளியே வணிகத்தை நடத்துவதற்கு தெரிவு செய்யும் சுதந்திரம் கொண்ட விண்ணப்பதாரர்களின் சிறப்புரிமை குறித்து குழு அக்கறை எழுப்பியது. மேலும் ஊதியம் தொடர்பாக, பெருநிறுவனங்கள் தங்கள் சொந்த மனித வளக் கொள்கைகளை வகுக்க முடியும் என்று கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு உறுதிப்படுத்தியதோடு எதிர்காலத்தில் இது உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியது.





# செலான் வடிக்கையளர்களுக்கு பரிசுகள்

சகல செலான் வேர்ள்ட் மாஸ்டர்கார்ட் பாவனையாளர்களுக்காக முன்னெடுக்கப்பட்டிருந்த பிரத்தியேகமான ஊக்குவிப்புத் திட்டத்தின் வெற்றியாளர் தெரிவு செலான் டவர்ஸில் அண்மையில் இடம்பெற்றது.

தன்னியக்க தெரிவினூடாக வெற்றியாளராக எஸ். தில்லைநாதன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.2 மில்லியன் ரூபாய்க்கு அதிகமான பெறுமதி கொண்ட ஒமெகா கடிகாரத்தை பெற்றுக்கொண்டார். மேலும் வெற்றியாளர்களுக்கு வெற்றிப் பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன.

கடந்த பண்டிகைப் பருவ காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான அத்தியாவசிய அட்டையாக திகழும் செலான் கார்ட்ஸ்,கிறிஸ்மஸ் சொப்பிங்கில் ஈடுபட்ட செலான் வேர்ள்ட் மாஸ்டர்கார்ட் பாவனையாளர்களுக்கு வெகுமதி வழங்கும் நோக்குடன் இந்த ஊக்குவிப்புத் திட்டத்தை முன்னெடுத்திருந்தது.

2022 ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 15 ஆம் திகதி வரை ரூ. 1 மில்லியன் வரை மொத்தமாக செலவிட்ட அட்டை பாவனையாளர்கள் வெற்றியீட்டுவதற்கு வாய்ப்பை வழங்கியிருந்தது.

# சன்குயிக் தொழிற்சாலை திறப்பு



இந்நிகழ்வில் உரையாற்றிய CO-RO A/S தலைவர் சோரன் ஹோல்ம் ஜென்சன் “இந்த RTD உற்பத்தி வசதியை அறிமுகப்படுத்தியதன் மூலம் சன்குயிக் லங்கா (பிரைவேட்) லிமிடெட் வளர்ச்சியின் புதிய கட்டத்திற்குள் நுழைகிறது.

தனித்துவமான சுவை மற்றும் தரத்துடன், பல தசாப்தங்களாக குடும்பங்களையும் நண்பர்களையும் ஒன்றிணைக்கும் வியாபாரக்குறியாக Sunquick இருந்து வருகிறது. எங்கள் நுகர்வோருக்கு சிறந்ததை வழங்குவதற்கான வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான மேலும் ஒரு சிறந்த சந்தர்ப்பமாக இதை கருதுகின்றோம் – எனக் கூறினார்.

சன்குயிக் லங்கா (பிரைவட்) லிமிடெட், மிகவும் விரும்பப்படும் சன்குயிக் பழங்கள் செறிவூட்டப்பட்ட, Sunquick BiBi ரெடி-டு-டிரிங்க் (RTD), அதன் வலுவான நிலையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், அதன் Sunquick RTD பான உற்பத்திக்காக நவீன தொழில்நுட்பங்களுடன் அமைந்த அதன் தொழிற்சாலையினை 2023 பெப்ரவரி 23 ஆம் திகதி ஹொரணையில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தது.

சிறப்பு நிகழ்வில் CO-RO A/S டென்மார்க், தலைவர் சோரன் ஹோல்ம் ஜென்சன் மற்றும் சன்குயிக் லங்கா தலைவர் திரு.ஹேமகா அமரசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர், மேலும் Sunquick Lanka மற்றும் CO-RO A/Sடென்மார்க், ஊடகங்கள் மற்றும் நலன்விரும்பிகள் போன்ற சிறப்பு அழைப்பாளர்களின் வருகையையும் காண முடிந்தது.

# நெஸ்லே லங்காவின் முகாமைத்துவ பணிப்பாளராக பேர்ன்ஹார்ட் ஸ்டெ:பான்

*நெஸ்லே லங்கா பிஎல்சி நிறுவனம் தனது முகாமைத்துவப் பணிப்பாளராக பேர்ன்ஹார்ட் ஸ்டெஃபான் அவர்களை மார்ச் 1, 2023 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமித்துள்ளது. ஜேசன் அவன்செென்யா அவர்களின் பதவிக்காலம் பெப்ரவரி 28, 2023 இல் முடிவடைகின்ற நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.*

*ஜேசன் அவர்கள் தனது பதவிக்காலத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான சவால்களை எதிர்கொண்டு இலங்கை மற்றும் மாலைதீவில் நெஸ்லே நிறுவனத்தின் செயல்பாடுகளை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளதுடன், மார்ச் 1, 2023 முதல் நெஸ்லே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் முகாமைத்துவப் பணிப்பாளராகப் புதிய பொறுப்பை ஏற்கின்றார்.*

*22 வருடங்களுக்கும் மேலான அனுபவத்துடன் நெஸ்லே லங்கா நிறுவனத்தில் இணைந்துகொள்கின்ற பேர்ன்ஹார்ட் ஸ்டெஃபான் அவர்கள், பிரான்சில் உள்ள நெஸ்லே வோட்டர்ஸ் நிறுவனத்துடன் கூட்டிணைப்பு முயற்சிகள் மற்றும் பிற வணிக கையகப்படுத்துதல் துறையில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார் அடுத்தடுத்த ஆண்டுகளில், அவர் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சுவிட்சலாந்தில் உள்ள நெஸ்லே வோட்டர்ஸில் கூடுதல் பணிப்பொறுப்புடன் பல்வேறு பாத்திரங்களை ஏற்றுக்கொண்டார், இறுதியில் 2007 இல் ஜேர்மனியில் நெஸ்லே வோட்டர்ஸ் டிரெக்ட் இன் உள்நாட்டு வணிக முகாமையாளராக மாறினார்.*

